V417

Regd. No. M 878

5-MAR 1924

பூர்ணசந்திரோதயம்.

பிரஹ்மக்ஞானம், மதம், சாஸ்திரம், கலை, நாகரீகம்
இவைகளைப் பரவச்செய்யும்
ஓர் சிறந்த மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

தொகுதி ௯ } காளயுக்திஞூ ஆவணிமீ 1918-ஞூ ஆகஸ்டுமீ { பகுதி 4.

விஷயங்கள்.

1.	தற்காலநிலைமை.—ஆர். ரங்கஸ்வாமி ஐயர் பி. ஏ.	97
2.	மனு ஸ்மிருதியின் ஆதாரம்—பி. எஸ். ராமசுப்பையர்	105
3.	பிரஹ்மக்ஞான தரிசனம். (பாலபாடம்.)—வி. வெங்குசாமி ஐயர்	113
4.	ஜீவகாருண்யம்—இராமானந்தயோகி	116
5.	பம்பாய் ஜீவதயாஞான பிரசாரக நிதி	118
6.	தார்மிக பிராமண சங்கம்—டி. வி. கோபாலசாமி ஐயர்	122
7.	ரிஷிகளின் உபதேசம்—ராமச்சந்திர நாயுடு	126
8.	புத்தக விமர்சம்.	128

அ. ரங்கசாமி ஐயர், B. A., B. L., பத்திராதிபர்

தபால் சார்ஜ் உள்பட வருஷ சந்தா இந்தியாவுக்கு ரூ 2
அன்னிய நாடுகளுக்கு ரூ 2—8—0 தனிப்பிரதி அணா 4
தபால் சார்ஜ் வேறு

மதுரை விக்டோரியா அச்சியந்திரசாலையில்
பதிப்பிக்கப்பெற்றது.

Copy-right Reserved.

ஜெகப் பிரசித்திபெற்ற பிரசவ வளையம்.

10 நிமிஷம்) (10 நிமிஷம்

மூலிகையடங்கிய இத்தாம்பர வளையத்தைஸ்திரீகள் பிரசவகாலங்களில் வலது கையில் அணிந்த 10 நிமிஷத்தில் சுகப்பிரசவமாவது நிச்சயம். அநேக குடும்பங்களில் உபயோகித்தும் இத்தாம்பரவளையம் மிகவும் புகழத்தக்கதேன்றே அறிவிக்கலாயினர்.

தாம்பர வளையம் ரூ 1—8—0

தபால் சார்ஜ் வேறு.

T. A. சாமி,
திருக்கழுக்குன்றம்,
செங்கல்பட்டு ஜில்லா.

---

(1) ஸாக்ரடீஸ் சரித்திரம்.

ஆர். ரெங்காச்சாரியார் எம். ஏ. எல். டி.

140 பக்கங்கள் அடங்கிய சரித்திரப் புத்தகம், மிகவும் செவ்விய நடையில் எழுதியது. யாவரும் வாங்கிப்படிக்கவேண்டியது விலை அணா 12, தபால் சார்ஜ் வேறு.

(2) விக்கிரஹாராதனை—ஒரு சம்பாஷணை. கே. எஸ். ராமசந்திரையர் விலை 0—1—0. பூர்ணசந்திரோதயம் சந்தாதாரர்களுக்கு 0—0—9. தபால் சார்ஜ் வேறு. ஸ்டாம்பு அனுப்பிப்பெற்றுக்கொள்ளலாம். 25 பிரதிகள் ஒரு தடவை வாங்குவோர்க்கு 25 % கமிஷன்.

(3) மீனாட்சி சுந்தரம்

அழகிய தமிழ் நாடகம். விலை 0—6—0. தபால் கூலி வேறு. பூர்ணசந்திரோதயம் சந்தாதாரர்க்கு 0–5–0. தபால் கூலி வேறு.

பூர்ணசந்திரோதயம் ஆபீஸ்,
மதுரை.

பூர்ணசந்திரோதயம்.

தொகுதி ௯ | காளயுக்தி௵ ஆவணி௴ 1918-௵ ஆகஸ்டு௴ | பகுதி 4.

தற்கால நிலைமை.

நிலவுலகத்தில் நடந்தேறிவரும் இத்தர்ம யுத்தத்தில் போர் புரியும் இருதிறத்தாருள் ஒருதிறத்தார் நியாயக் கக்ஷியையும் மற்றொரு திறத்தார் அதன் மாறான கக்ஷியையும் தழுவியவராவார். அங்ஙனம் கூறுவதினால் முற்கூறிய கக்ஷியாருள் எல்லோரும் நியாய நெறி பிறழாதவர் என்றாவது அல்லது அவர்கள் சரிதையில் களங்கமற்றவர் என்றாவது சொல்லப் பெறுவதில்லை. அதுபோலவே பின்னர்க் கூறிய கக்ஷியாரில் நியாய வாதிகளில்லை யென்றாவது அவர்களால் உலகிற்கு நன்மையே செய்யப்படவில்லை யென்றாவது கூறுவதற்கு நாம் முன்வரவில்லை. ஆனால் சென்ற 4 வருஷங்களுக்கு முன்னர்த் தொடங்கிய இக்கோர யுத்தத்தில் ஜர்மானியர் தாம் வெகு வருஷங்களாகத் தேர்ச்சி செய்து சன்னத்தம் செய்திருந்த ராணுவ பலத்தாலும் யுத்த யந்திரங்களுடைய வலிமையாலும் எங்ஙனமாவது எதிராளியை வென்று விடலாம் என்ற துணிபோடு அக்கிரமமாக நிரபராதிகளான பெல்ஜியத்தாருடனும் பிரான்சுக்காருடனும் போர் துவக்கினார் என்பது யாவரும் மறுக்கமுடியாதது. மேலும் புஜபலத்தின் மிகுதியால் அத்திறத்தார், உலகத்தில் நியாயமொன்றிருக்கின்றது, கடவுளிருக்கிறார், என்பதை

யும் கொஞ்சமும் மதியாது நிராயுதபாணிகளான பெல்ஜி யத்துப் பிரஜைகளை, வருத்திக்கொன்றதும், ஆஸ்பத்திரிக் கப்பல்களைக் கூட குண்டுகளிட்டுச் சிதைத்ததும், உலகத் தாருடைய வெறுப்பை, மூட்டிற்று. வெகு காலம்வரை சண்டையில் தலையிடவேண்டாம் என்று நல்ல வார்த்தை களாகச் சொல்லிக்கொண்டு வந்த அமெரிக்காவில் ஐக்கிய நாட்டுப் பிரசிடெண்டவர்களையும் கொஞ்சமும் மதியாது, ஜர்மானியர் அவர்களையும் சண்டையில் ஈர்த்தார்கள். அது முதல் ஜர்மானியர் கதி அதோ கதியாகத் தலைப்பட்டது.

*
* *

பொதுவாகப் பார்க்கும் பொழுது இங்கிலாந்து பிரா ன்சு முதலிய தேசத்தாருடைய கக்ஷியானது நியாயமான கக்ஷியென்பதில் கொஞ்சமும் சந்தேகமில்லையாயினும், அமெரிக்கா ஐக்கிய நாட்டார் அக்கக்ஷியுடன் சேர்ந்தது அக்கக்ஷியாருடைய நியாயத்திற்கே உயர்ந்த சான்றாக இரு ப்பதுடன் அமெரிக்கா ஐக்கிய நாட்டாருடையவும் அந்நா ட்டாரின் தலைவரான பிரசிடெண்டவர்களுடையவும் பெரு ந்தகைமையையும், உயர் நோக்கங்களையும், பொது ஜனப்பரி வையும், சுயநலம் சிறிதும் கருதாச் சீர்மையையும் நன்கு துலக்குகின்றது.

***

உலகத்தில் நியாயத்தை நிலைநாட்டுவதைத் தவிர வேறு ஒரு நோக்கமும் பிரசிடெண்டு வில்சனவர்களுக்கில்லை யென் பது அங்கையிலிட்ட நெல்லியங்கனியைப் போல் காணக்கி டக்கின்றது. தனக்கு நாடு சேர்க்கவேண்டுமென்ற எண்ண மில்லை யென்றும், வேறு ஒருவித அவாவும் இல்லை யென்றும், வியக்தமாகக் கூறியிருக்கின்றார். பகவத் கீதையில் கூறியிருக்கிறபடி, சுய நலமில்லாமல் ஒரு கரு மத்தைச் செய்பவன், சுயநலம் கருதுபவன் செய்யும் முயற் சியுடன் அக்கருமத்தைச் செய்யவேண்டும் என்பது போல் இதுகாறும் அமெரிக்கர் செய்திருக்கும் யுத்த முயற்சி மிக வும் பாராட்டத்தக்கது. இதற்குள் 15 லக்ஷம் சைன்யத் தையும், அதற்கு வேண்டிய யுத்த சன்னாகங்களையும் பிரா ன்சில் கொணர்ந்து சேர்த்திருக்கிறார்கள். இதைபபோல இன்னும் எத்துணையோ பன்மடங்கு முயற்சி செய்து கொ

ண்டிருக்கிறார்கள். இவர்களது பேருதவியாலன்றோ சில மாதங்களாக ஜர்மானியர் மேற் சாங்கத்தில் தோல்வியடைந்துவருகிறார்கள்.

***

யுத்தத்தின் நோக்கம், சமாதான மாவதற்கு நிபந்தனை, இவைகள் விஷயமாக ஒவ்வொரு அரசாங்கத்தாரின் முக்கிய மந்திரிகள் அல்லது தலைவர்கள் சொல்லியிருக்கும் வார்த்தைகளை யுற்று நோக்குங்கால், பிரஸிடெண்டு வில்சன் அவர்கள் வார்த்தைகளே மிகவும் உயர் நலம் வாய்ந்தவையாகவும், நியாயம் பொதிந்தவைகளாயும், சுய நல மற்றவைகளாயும், நிஷ்கபடமாகவும் துலங்குகின்றன. அவர்கள் செய்துவரும்பேருதவியாலும், அவர்களுடைய நியாயத்துடன் கலந்த பராக்கிரமத்தாலும், இவ்வியுத்தமுடிவில் நிகழும் சமாதானமானது கூடுமான வரையில் நிலைத்த சமாதானமாகவும், போலிச் சமாதானமில்லாமலும் இருக்கும் என்று நினைக்க ஏதுவிருக்கிறது.

***

இதுகாறும் உலகத்தில் நடக்கும் அநியாயங்களை யெல்லாம் சொல்லிக் கொள்ளவும், அவைகளுக்கு சிகிச்சை தேடவும், யாவரும் இங்கிலாந்து சென்று வந்தனர். இப்போது இங்கிலாந்துடன் அமெரிக்காவும் சேர்ந்து இருக்கிறதும், உலகத்தில் க்ஷேமம் பரவுதற்கு உழைத்து வரச் சித்தமாயிருப்பதும் அந்நாட்டிற்குப் பெருமையே யொழிய வேறில்லை.

***

அத்தகைமை பூண்ட அமெரிக்கா ஐக்கிய நாடுகளில் சென்ற வருஷத்தில் "உலக பந்த விமோசன சங்கம்" என்று ஒன்று ஸ்தாபிக்கப் பெற்றிருக்கிறது. இப்போது நேசக் கக்ஷியார் கொண்ட நோக்கத்தைப் போல் ஒரு தேசத்தார் ஆளுகைக்குட்பட்டவர்களுக்கு சுதந்திரம் கொடுப்பது என்ற நோக்கத்துடனும், அதைவிட மேன்மையான மற்றொரு நோக்கத்துடனும், இச்சங்கம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. அதாவது உலகத்திலே ஓரிடத்திலும் நிர்ப்பந்தமே இல்லாமல் நிவாரணம் செய்யப்படவேண்டும் என்றும், ஓரிடத்திலும் மத விஷயத்திலாவது, பொ

ருள் சம்பாத்தியத்திலாவது, ஆட்சி விஷயத்திலாவது, ஒருவரையும் ஒருவரும் நிர்ப்பந்திக்காமல் எங்கும் சுயேச்சையானது பரவவேண்டும் என்றும் இச்சபையின் நோக்கம். இச்சங்கத்தின் நோக்கங்களை நிறைவேற்றச் செய்யும் முயற்சிகளனைத்தும் சட்ட சம்மதமாகவும் நியாய சம்மதமாகவுமேயிருக்கும். இச்சபைக்கு பற்பல தேசங்களிலும் அங்கத்தினர் ஏற்படுவார்கள். பற்பல தேசங்களுக்கும் பொதுவான அக்கிராசனரொருவரிருக்கவேண்டுவதவசியமாகையால் அச்சங்கத்தின் சார்வதேசிக அக்கிராசனராக அமையும்படி நமது பிரசிடெண்டவர்களை வேண்டிக் கொண்டனர். அந்த உயர்வும், உத்தரவாதமும் சேர்ந்த பதவியை வகிக்க மாது ஸ்ரீ அன்னிபெஸண்டம்மையவர்களும் இணங்கியிருக்கின்றனர். இச்சங்கம் அமெரிக்கா ஐக்கியநாட்டில் நிலைபெற்றதும், நமது தலைவரவர்கள் அதன் தலைமை வகித்தற்கு இணங்கியதும் எவ்வகையிலும் மிகவும் ஏற்புடையத்தாம்.

* * *

பொது ஜனங்களுக்கு உழைப்பவரை உலகத்தோர் புகழுதலும், ஆனால் அவ்வாறு உழைப்பது ஒரு சிலருக்கு சிறிது ஹானி உண்டுபண்ணக்கூடியதாயிருந்தால் அவர்கள் உழைப்போரைக் கடிவதும் இயல்பு. ஆனால் மேதக்கோர், சுய நலத்தால் கடிவதற்குக் கொஞ்சமேனும் அஞ்சாமல், சுயநலமின்றிப் பொது நோக்கால் ஆமோதிப்போரின் பாராட்டலையே கவனிப்பர். அங்ஙனம் நமது தலைவர் அவர்கள் நமது தாய் நாட்டின் உயர்வுக்காக எடுக்கும் பெருமுயற்சிக்காக அவரை எத்தனை பேர் இகழ்ந்தும், கடிந்தும், வசைச் சொல் கூறியும், வருகின்றனர்? தமது ஜன்ம பூமியாகிய இங்கிலாந்துக்குத் துரோஹி என்று அறிவில்லாமல் இவரை வசை கூறுகிறார்கள் சில ஆங்கிலர். இங்கிலாந்தின் உண்மையான பேருபகாரி இவர் என்பதை அறிய ஆற்றலில்லாதார் இங்ஙனம் கூறுவதை நம் அன்னை கவனிக்கவில்லை. ஏன் எனின், ஜன்ம ஜன்மங்களாக எளியாருடன் போர் புரிந்து ஸத்யத்தை நிலை நாட்டும் போர் வீரரன்றோ இவர். இவருக்கு பகையாளிகளின் அம்புகளால சரீரமெங்கும் புண்படினும் அதைப் பாராட்டுவரோ? ஆனால் எதைப் பாராட்டுவர்?

யாருக்காக இவ்வுத்தமி உழைக்கின்றாரோ, எவர் மேம்பாட்டுக்காகத் தம்மினத்தாரையும் விரோதித்துக்கொண்டு, மெய்வருத்தம் பாராமல், பசி நோக்காமல் கண்துஞ்சாமல், எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளாமல், செவ்வி யருமையும் பாராமல், அவமதிப்பும் கொள்ளாமல், கருமமே கண்ணாயுழைத்துக்கொண்டு வருகின்றாரோ அவர்களில் ஒரு சிலரே ஒரு சிறிது கடுமையான வார்த்தை கூறினும் அதைப் பொறுப்பது சிரமமாகின்றது. சிறியார் செய்யும் பெரும் பிழையையும் பொறுத்தலவசியம் என்பது மேலோர் வக்காகினும், அச்சிறியார், அறியாமையாலே தான் பிழை செய்கின்றார்களாயினும் அதனால் உண்டாகும் மனக்கிலேசத்துக்கு அளவில்லை. ஆனால் இதனால் தாம் எடுத்த கருமத்தை விடப் போகின்றாரா இவ்வுத்தமி? இல்லை. இல்லை. மூக்காலும் இல்லை.

***

சென்னை மாகாணத்தில் சில காலமாக மாது ஸ்ரீ அன்னிபெஸண்டம்மையவர்களை உல்லங்கனம் செய்தும், அவரது நோக்கங்களை உயர் நோக்கங்களில்லையென்று இகழ்ந்தும், அவரை பலவாறு அவமதித்தும், சில புல்லியர், கூட்டங்களிலும் பத்திரிகைகளிலும், பேசியும், எழுதியும் வருகின்றனர். அவர்களால் அநேகர் ஏமாற்றப்பட்டு மோசம் போகின்றனர். அந்தோபரிதாபம்! இத்தகைய நடத்தையால் யாருக்கு நஷ்டம் என்பதை கொஞ்சமும் கருதுகிறார்களில்லையே! ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்கல்லவோ எளிது, இதையறியாதது என்ன பேதமை!

***

ஒரு சிலர் அறியாமையால் தமது புன்மையை விளக்குவாராயினும் மற்றவர்களுடைய கடமையானது வெள்ளிடை மலைபோல் காணக்கிடக்கின்றது. விற்போராயினும், வாய்ப்போராயினும், எப்போராயினும், ஒரு திறத்தார் ஒற்றுமையுற்றிராத போனால் ஜயம் பெறலரிது. ஆகையால் யாவரும் ஒற்றுமையாய் நமது தலைவரை அனுசரித்து அவர் சொற்படி நடப்பதுடன் அவரை இகழ்ந்து கூறுபவர்களைக் கண்டித்தும், அவரது வார்த்தைகளை ஆக்ஷேபித்தும், தலைவரிடத்துள்ள நம்பிக்கையை உலகமறியத் தீர்மானங்கள் மூலம் வெளியிட்டும், அவருக்கு உதவி செய்யக் கடமைப்பட்டவராவார்.

ஆகஸ்டு மீ]உயன்று மதனப்பள்ளி தேசீயக்கலாசாலையில் ஒரு விசேஷம் நடந்தேறியது. தேசீய சர்வகலாசாலையின் சான்ஸலரான கவீந்திரராம் ரவீந்திரநாத டாகோருடைய விக்கிரஹத்தை அரங்கேற்றினார்கள். அவ்வுருவத்தைச் சமைத்தவரும், சிற்ப சாஸ்திர விற்பன்னரான அவனீந்திரநாத டாகோரின் சிஷ்யருமான, ஸ்ரீமான் என். கே. திவால் என்பவரும் சில வார்த்தைகள் கூறினர். கல்லூரியின் தலைமை உபாத்தியாயரான ஸ்ரீமான் கஸின்ஸ் என்பவர் அக்கிராஸனராயமர்ந்து ரவீந்திரநாதருடைய பெருமையைப்பற்றி யெடுத்துரைத்தார். ஸ்ரீமான் கிரிராயர் அவர்கள் சில வார்த்தைகள் கூறி அந்த விக்கிரஹத்தை மாணாக்கர்களுக்கெல்லாம் ஒரு உற்சாக விக்கிரஹமாயிருக்கும்படி அரங்கேற்றினர். ரவீந்திர நாதரை முதன் முதல் மேனாட்டார் அறியும்படி அவர் எழுதிய முதல் ஆங்கிலப் புஸ்தகமாகிய கீதாஞ்சலியை வெளியிட்ட அயர்லாந்து கவியாகிய யீட்ஸ் என்பவருடைய படமும் அன்றுதினம் அரங்கேற்றப்பட்டது.

***

நமது தாய் நாட்டுக்காக உழைத்துவரும் மாது ஸ்ரீ அன்னிபெஸண்டம்மாளின் பெரிய உருவப் படம் ஒருபக்கத்தில், மற்றொரு பக்கத்தில் ரவீந்திர நாத டாகோரின் விக்கிரஹமும், அந்த தேசீய கலாசாலையின் மண்டபத்தை அலங்கரித்தன. அக்காலத்தில் அயர்லாந்து தேசத்துக் கல்விமான்களில் ஒருவரும், கவிசாமர்த்தியம் பொருந்தியவரும், ரவீந்திரநாதருடைய ஆப்தருமாகிய ஸ்ரீ ஜேம்ஸ் கஸின்ஸ் அவர்கள் ரவீந்திரரைப்பற்றி மாணாக்கருக்கு எடுத்துரைத்ததும் மிகவும் பொருத்தமாயிருந்தது. இந்திய வாழ்த்துப் பாடிய பின் சபை கலைந்தது. இத்தகைய சமயங்கள் வாய்க்கப்பெற்ற மாணாக்கர்கள் புண்யசாலிகள். இத்தகைய கல்லூரியே கல்லூரி.

***

மதுரையில் அநேக ஆங்கில வித்யாசாலைகளிருக்கின்றன. ஆனால் இந்தியர்கள் அனைவருக்கும் பொதுவாயும் சொந்தமாயும், ஒரு விதத்தில் தேசீயக் கலாசாலைகள் என்று சொல்லக்கூடியவை மதுரை காலேஜ் போர்டார் ஆளுகைக்

குட்பட்ட மதுரைக்காலேஜும், சேதுபதி ஹைஸ்கூலும், கிளைப்பள்ளிக்கூடங்களும். இவைகள் சென்னை சர்வ கலா சாலையாரின் ஆளுகைக்குட்பட்டவை. ஆனால் இப்போது இந்தியாவில் ஏற்பட்டிருக்கும் கிளர்ச்சியினால் இக்கலாசாலைகளும் சம்பந்திக்கப்பட்டு கூடுமானவரை உணர்ச்சியில் மாறுதல்களை அடையவேண்டும் என்பது பொது ஜனங்களுடைய கருத்து என்று தோன்றுகிறது. சென்ற சில காலமாக சென்னையில் மாது ஸ்ரீ அன்னிபெஸண்டம்மையின் முயற்சியால் "ஸ்கௌட்" ஏற்பாடானது நடைபெற்றுவருவது யாவரும் அறிந்த விஷயமே. அந்த ஏற்பாட்டுக்குச் சமமந்தமாக அநேக வாலிபர்கள் இக்கலாசாலைகளிலிருந்து ஸ்கௌட்களாகச் சேரவேண்டும். இந்தியன் ஸ்கௌட் என்ற ஆங்கில மாதாந்தரப்பத்திரிகைக்கு இப்பள்ளிக்கூட மாணுக்கர்கள் சந்தாதார்களாகச் சேரவேண்டும். இந்திய தேசீய கீதங்களை இப்பள்ளிக்கூட மாணுக்கர்கள் மாணுக்கர் கூட்டங்களிலும், விழாக் காலங்களிலும், மனமுருகிப் பாடவேண்டும். இந்தியன் என்ற கௌரவத்தை திணே திணே இப்பள்ளிக்கூடங்களில் மாணுக்கர் உணரும்படி செய்யவேண்டும். மேலும் ஒரு மதத்திலிருந்து மற்றொரு மதத்திற்கு இளம்பிராயமுள்ள சிறுவர்கள் ஈர்க்கப்படாவண்ணம், ஒவ்வொருவருக்கும் அவரவர் மத உண்மைகளைப் புகட்டவேண்டும்.

***

மதுரைக் காலேஜிலுள்ள பல மாணுக்கர்கள் ஸ்கௌட்களாகச் சேர்ந்திருக்கிறார்கள் என்று அறியச் சந்தோஷிக்கிறோம். மேலும் அக்காலேஜின் தலைமை உபாத்தியாயரான ஸ்ரீமான் எஸ். சூரியநாராயண சர்மா அவர்கள், வயதில் குறைந்தவர்களாயினும், அறிவிலும், அமைதியிலும், முதியோராகக் காணப்படுகிறார்கள். இங்கிலாந்து சென்று ஆங்குள்ள கலாசாலைகளில் சிறந்த விருதுகளையும் பட்டங்களைப்பெற்று வந்தவராயினும், தமிழில் பேசவும், இடுப்பில் வஸ்திரத்தை ஆந்தியாகட்டும் மாதிரியாகக் கட்டுவதிலும், தலையில் தலைக்குட்டை கட்டுவதிலும இழிவு ஒன்றுமில்லை மேன்மையே என்று நினைக்கிறதாயும் தெரியவருகிறது. செ

ன்ற பல வருஷங்களாக இக்கலாசாலையில் ஒரு நல்ல வழக்கம் நின்றுபோயிருந்தது. அதை மறுபடியும் வழக்கத்துக்குக் கொண்டுவந்திருக்கிறார் எனத் தெரியவருகிறது. காலையில் கூடியதும் சகல மாணவர்களும் கூடி கடவுளை வழிபடுதல் என்பது மிகவும் சிறந்த பழக்கமாயிருந்தது. அதை சில வருஷங்களாய் அனுஷ்டியாமலிருந்ததாம். இப்போது இத்தலைமை உபாத்தியாயர் வந்த பிறகு இத்தூய வழக்கத்தை மறுபடியும் அனுசரிக்கும்படி செய்திருக்கிறார் என்பது இனிமேல் இதைப் போன்ற நல்வழிகளில் செல்ல மனமுடையவர் இவர் என்று காட்டுகிறது.

***

ரிடையர்டு தாசில்தார் பிரஹ்ம ஸ்ரீ கே. எஸ். ராமச்சந்திரையர் அவர்கள் நாளிது ஆகஸ்டு மீ 1உயில் மதுரை காலேஜ் போர்டாருக்கு ஒரு நிருபம் எழுதியிருக்கிறார். அவர்கள் ஆளுகைக்குட்பட்ட பள்ளிகளில் மத விஷயமாய் கல்வி கற்பித்தலவசியம் என்றும் அப்படி போதிக்கும்படி சீக்கிரம் ஏற்பாடு செய்யும்படிக்கும் எழுதியிருக்கிறார். காலேஜ் போர்ட்டு அங்கத்தினர் பலரையும் நேரில் பார்த்திருக்கிறார். இம்முயற்சியில் பலர் அனுதாபங்கொண்டிருப்பதாகத் தெரியவருகிறது. காலதாமசம் ஏற்படாதபடி சீக்கிரம் ஒரு ஏற்பாடு செய்து மாணுக்கர்கட்கு மதப்பயிற்சி கொடுப்பார்கள் என்று எண்ணுகிறோம். இப்போதிருக்கும் உபாத்திமார்களில் இவ்விஷயமாய் அறிவும் ஆற்றலும் உடைய சிலர் அவசியமிருப்பார்கள். அவர்களுக்கு வேறு சில பாடங்கள் சொல்லிக்கொடுக்கும் காலத்தைக் குறைத்து மதப்பயிற்சி சொல்லித் தரும்படி செய்யலாம் ஆனால் அது தாத்காலிகமான ஏற்பாடாக இருத்தலவசியம். காலக்கிரமத்தில் மதப்பயிற்சிக்கென்று சில கௌரவமான உபாத்தியாயரை நியமிக்கவேண்டும் அதாவது குறைந்த சம்பளத்தில் ஆங்கிலம் தெரியாத வைதீகர்களை மட்டும் உபாத்தியாயராக நியமித்தால் மாணுக்கர்கள் அவர்களை மதியார்கள். கூடுமானவரை மற்ற பாடங்களைக் கற்பிக்க உபாத்திமாரை நியமிப்பது போல் இம்மதப் பயிற்சி உபாத்தியாயரும் பி. ஏ. முதலியப் பட்டந்தாங்கியவராயும், மற்ற உயர்தர உபாத்தியாயருக்கு சமானமான அந்தஸ்து உடையவராயிருக்கவேண்டும். மதப்பரீக்ஷையும் வைத்தல்வேண்டும். அதில் தேரியவர்களுக்கு பரிசிலகளித்தல்வேண்டும். இவ்விதம் ஏற்பாடுகள் செய்தால் மிகவும் நலமாகும்.

ஆர். ரெங்கஸ்வாமி ஐயர்.

மநு ஸ்மிருதியின் ஆதாரங்கள்.

(86ம் பக்கத்தொடர்ச்சி)

அக்காலத்தில் இந்திரிய நுகர்ச்சியின் பொருட்டே ஜனங்களுக்கு ஆசையை ஊட்ட வேண்டியிருந்தது. இப்போதோ இவ்வாசை அபரிமிதமாகிவிட்டது. ஆகையால் அதை அடிக்கடி அடக்க வேண்டியதவசியமாயிருக்கிறது. இந்திரியங்களால் வாதனையடையாதவன் பத்து லக்ஷத்தில் ஒருவன் இருப்பனோ என்னவோ! நம்மனதும், சரீரமும் சுபாவமாகவே இந்திரிய விஷயங்களில் பிரவிருத்திக்கின்றன ஆகையால் இன்பம் அல்லது காமம் தான் பிரவிருத்தி மார்க்கத்திற்குப் பரம புருஷார்த்தம் என்று மனுவானவர் கூறியிருந்தால் ஜனங்கள் அநியாயமாய் வெகுசீக்கிரம் அமிழ்ந்து போவார்கள். அதற்காகவே எவ்வளவோ வரையறைகளிற் குட்பட்டு சுகமநுபவிக்கலாமென்று கூறியிருக்கிறார்.

மனிதர்கள் இந்திரிய நுகர்ச்சியால் சுகமநுபவித்தற்கும், மிருகங்கள் சுகமனுபவித்தகற்கும் வித்யாசமுண்டு. மிருகங்கள் தம்முன்னே விஷயங்கள் எதிர்ப்படும் போது, அவைகளை உடனே நுகர்ந்து பிறகு மறந்துவிடும். ஆனால் ஒருதடவை அனுபவித்த சுகத்தை மனிதன் மனதிற் கொள்ளுகிறான். அதன்பயனாக அவன் எண்ணங்களும், ஆசைகளும் பலவிதமாய் விகாரப்படுகின்றன. இச்சமயத்தில் நிவிருத்திமார்க்கத்தின் லக்ஷ்யங்களும் அவன் மநதைக்கவருகின்றன. பரமாத்மதத்தவம் அவனிடத்தில் நாளுக்கு நாள் அதிகமாய் விளங்குகிறது. மனிதன் அநுபவிக்கும் சுகம் யாவும், வாசனைமயமான காமனைகளாகின்றன. அதுதான் பிறகு தம்குடும்பத்தவரிடத்தும் தம் தேசத்தவரிடத்தும் ஓர் பற்றுதலாக நிலைபெறுகிறது. ஏனெனில் தம் தேசம் க்ஷேமமாயிராவிடில், தமது குடும்பம் க்ஷேமமா

யிருக்க முடியாது. தமது குடும்பம் க்ஷேமமாயிராவிடில், தமது சொந்த க்ஷேமமும் கிடையாது. முன் இந்திரிய சுகமாயிருந்ததே இப்போது குடும்ப வாழ்க்கைகளிலும், தேசீய வாழ்க்கையிலும் அன்பும் அநுதாபமுமாக நிகழ்கின்றது. முன் இந்திரிய சுகத்திற்கான விஷயங்கள் யாவும் இப்போது ஸங்கீதம், சித்திரம், சிற்பம் கவித்வம், நாடகம் முதலிய கலைகளாகின்றன. இவைகளை யடையப் பொருள் வேண்டும். ஆகையால் தான் பொருளில்லார்க்கிவ்வுலக மில்லை எனப்படுகிறது.

பொருள் சம்பாதிப்பதிலும், தரும வழியில் செல்லாமல் ஒவ்வொருவரும் தத்தமக் கியற்கையான சுயநலத்தையே பெரிதும் கோரிப் பிறருக்குச் செய்யவேண்டிய கடமைகளை மறப்பாரானால், எந்த ஜனஸமூஹமும் நிலைக்கவேமாட்டாது. நம் ஒவ்வொரு வருடைய சுதந்திரமும் சௌகர்யமும் எம்மட்டி லிருக்க வேண்டுமென்று நாமெப்படி நிர்ணயிப்பது? மற்றெல்லோருக்கும் உள்ள சௌகர்யக் குறைவையும் அவசியங்களையும் நன்குணர்ந்து நிறைவேற்றிய பிறகு தான் அது கூடும். மனிதரின் பெரும்பான்மையர் இன்னும் இவ்வுண்மையை நன்கறிந்தபாடில்லை.

தைத்யர்கள் சிற்றின்பத்தில் அமிழ்ந்தனராகையால், ஆர்யர்கள் உயர்வான இன்பம் பெறுமாறு தம் சரீரத்தை நன்கு பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டு நல்ல ஆசாரத்தையும், சுசி, ருசியையுமே பெரிது என்று மனு வற்புறுத்தினர். பொருளைப் பற்றிக்கூறு மிடத்தும், ஓர் ஜனஸமூஹத்தின் தொழில் முயற்சியனைத்தும் அதன் ஜனங்கள் பலருடைய தகைமைக்குத் தக்கவாறு பிரிக்கப்படவேண்டுமென்றும், அவரவர்களுடைய அவசியங்களுக்குத் தக்கவாறு அவரவர்கள் பொருளையடைய வேண்டுமென்பதாகவும், பொருள் சம்பாதிக்கத்தக்கோரை யெல்லாம் இதற்காகவே பிரத்யேகப்படுத்தியும் வைத்தனர். தர்மத்தைப்பற்றி பூர்ணமாயும் விவரமாயும் கூறியிருக்கிறார். முன்னிரண்டைப்பற்றிச் சொல்லுகையிலும் தர்மத்தையே திரும்பத்திரும்ப வற்புறுத்தியிருக்கிறார்.

மஹாபாரத யுத்தத்திற்கு முன் வியாஸபகவான் "தர்மத்தைக் கடைப்பிடியுங்கள். அதனின்றுதான் பொருளும் இன்பமும் கிடைக்கும்" என்று கூறியும் பயன்படவில்லை. அவ்வார்த்தையைக்கேட்காமல் செய்த யுத்தத்தின் முடிவென்ன? எவ்வளவு பெரிய நாகரிகமாயிருக்கட்டும், எவ்வளவு அரிய ராணுவ சாஸ்திரங்களைப் பயின்ற போதிலும் தர்மம் ஒன்றை மறந்தால் அவையாவும் தூளியாகவும், புகையாகவும் தான் போகும். உண்மையாகவே அரசாட்சி முறைக்கு சீலமும் தர்மமுமே அடிப்படையான ஆதாரங்கள்.

ஆகையால் பிரவிருத்திமார்க்கத்தார்கள் தேடவேண்டியவை மூன்று. அவை **தர்மம், அர்த்தம், காமம்,** அல்லது **அறம், பொருள், இன்பம்.** தர்மத்தைச் செய்தே திரவியம் சம்பாதிக்க வேண்டும் திரவியத்தை சம்பாதிக்காவிடில் உயர்வான இன்பம் நுகரமுடியாது. இன்பத்திற்காக இல்லாவிட்டால் பணம் சுமைக்கு பிடித்த கேடல்லவா? பொறுக்கக்கூடாத சுமையல்லவா? பொருளில்லாவிடில் தர்மம் அனைத்தும் பயனை இல்லாததாயிருக்கிறது.

தர்மத்திற்கு விரோமாய்ப் பணம் சம்பாதிக்காதே, இன்பத்தை நாடாதே. பொது ஜனங்களுக்கு அருவருப்பை உண்டுபண்ணாதே. வெகு காலத்திற்குப்பிறகு கூட யாதொரு சுகத்தையும் விளைக்கக்கூடாத ஓர் காரியத்தைச் செய்யாதே" என்று மனு விதித்திருக்கிறார்.

பிறகு நிவிருத்தி மார்க்கத்திற் செல்ல ஆரம்பிக்கிறான் இதில் தான் மோக்ஷத்தை நாடுகிறான். பிரவிருத்தி, நிவிருத்தி என்பது இரண்டு மார்க்கங்ளாகச்சொல்லப்பட்டாலும், அவை ஒரே மார்க்கத்தின் இரு பாதிகள் தான். ஆகையால் ஒன்றை யநுஷ்டிக்காமல் இன்னொன்றுக்குப்போக முடியாது. கீழ்ப்படியையும் கவனியாமலிருக்கமுடியாது. கீழ்ப்படிகளைத்தாண்டிய பிறகுதான் மேற்படிகளில் ஏறுவது கூடும். இதுவரை தனக்கென்று பிரயத்தனப்பட்ட மூன்று புருஷார்த்தங்களுமே இப்போது மூன்று கடமைகளாக மாறியிருக்கின்றன.

உலகினர் தற்காலத்தில் ஜன ஸமூஹத்திற்குரிய கடமையை மட்டும் உணர்ந்திருக்கிறார்கள். அதாவது தாம் எந்த ஜனங்களுக்கு மத்தியில் பிறந்திருக்கிறார்களோ அவர்களுக்குச் சிற்சில கடமைகளைச் செய்யவேண்டுமென்று நினைக்கிறார்கள். நமது முன்னோர்கள் இதைத்தவிர வேறு மூன்று கடமைகளைக் கைக்கொண்டார்கள். தேவர்களுக்கும் பிதிருக்களுக்கும் ரிஷிகளுக்கும் இன்னின்ன கடமையை நிறைவேற்ற வேண்டுமென்பதையும் அறிந்திருக்கின்றனர்.

பிரவிருத்தி, மார்க்கத்திற்கு மூன்று புருஷார்த்தங்கள் உளவே. ஆனால் நிவிருத்தி மார்க்கத்திற்கு மோக்ஷம் என்னும் ஒரேலக்ஷ்யம் இருப்பதேன்? பிரவிருத்தி மார்க்கத்தில் இன்பம் பெறுவதற்கு தர்மமும் அர்த்தமும் முக்கிய சாதனங்களாயிருந்தமாதிரி, மோக்ஷத்தை யடைவது எவற்றைப் பொறுத்திருக்கிறது? பிரவிருத்தியில் இன்பம் அடைவதற்கு தர்மமும் பொருளும் சாதனங்கள் தாமாயினும் முதற்சாதனமான தர்மமே மேலே விளக்கியபடி வற்புறுத்தப்படுகிறது. நிவிருத்தியில் மோக்ஷமே புருஷார்த்தம். அர்த்தம் காமம் என்பவற்றிற்குச் சரியானவை பக்தியும் யோகஸித்தியும். ஆனால் இவை மோக்ஷத்துக்குச் சாதனமல்ல, பலன் எனலாம். மோக்ஷத்தையடையவேண்டுமென்று எவ்வளவுக்கெவ்வளவு தீவிரமாய் ஒருவன் முயலுகிறானோ அவ்வளவுக்கவ்வளவு தான் மற்ற இரண்டும், ஸித்தியும், பக்தியும், அவனுக்குப் பெருகும். பக்தி, ஸித்தி, முக்தி, மூன்றும் ஒன்றுக்கொன்று சம்மந்தப்பட்டிருந்தபோதிலும், இதில் நமது கருத்திற் கொள்ளவேண்டியது மோக்ஷமே யாம். பிரவிருத்தி மார்க்கத்தில் அப்படியே தர்மம் ஒன்றைத்தான் கருத்திற் கொள்ளவேண்டும். அந்த மாதிரி நிவிருத்தி மார்க்கத்திலும் எல்லாவற்றிலும் கடைசியா யடையவேண்டிய முக்தியே பெரிதாகக் கூறப்படுகிறது.

பிரவிருத்தி மார்க்கத்தில் தர்மமாயிருப்பது தான் நிவிருத்தி மார்க்கத்தில் மோக்ஷ இச்சையாகி அது நாளுக்கு நாள் வளரும் வைராக்ய மாகிக்கடை முறையில் உயர் நலம் வாய்ந்த ஞானமும், சாந்தியுமாக மாறுகிறது. இவ்விதமே யோக பாஷ்யத்தில் கூறப்பட்டுளது. நிவிருத்திமார்க்கத்தார்

அடையும் பொருள் என்னவென்றால், யோகசித்திகள் தாம், அவைகள ஸமாதி நிலையை அடைகின்றவாக்கு ஏற்படுகின்றன. அவை ஸமாதி நிலையை அடைவதற்குத் தடைகள். ஸமாதியையடைந்து எழுந்த பிறகு அவையாவும சக்திகளாகின்றன. வேண்டாமென்று ஒழிப்பவர்க்குச் சகல ஐச்வர்யங்களும் குவியும், இந்திரிய நிக்கிரகத்தில் பூர்ணம் பெற்றவர்களுக்கு அபாரமான சிருஷ்டிசக்தி ஏற்படுகிறது. இந்திரியங்களை ஜயித்தவர்களுக்கு பூமியிலும், 'தண்ணீரிலும், ஆகாயத்திலும் புதைந்து கிடக்கும் ஐசுவரியங்களெல்லாம் தெரியவரும். இவ்விதம் யோக சூத்திரத்திலும, ஸ்மாக்க தீபத்திலும் கூறப்பட்டிருக்கிறது.

இதென்ன விந்தை! வேண்டாதவர்கட்கு ரத்நங்களையும், முத்துக்களையும் கொடுப்பது எதற்கு? ஒருவனுக்கு சக்திகளை ஏராளமாகக் கொடுத்தும் அவைகளை உபயோகியாதவனுக்கு கொடுப்பதில் பயனென்ன? தாம் செய்யும் தர்மமும், தேடும் பொருளும், அடையும இன்பமும், தமக்கலல. பிறருக்கு என்ற எண்ணத்தோடே வாழ்கிறவர்களை உலகத்தின அதிகார புருஷர்களும, கர்மதேவர்களும், ரிஷிகளும் தங்கள ஊழியத்திற்காகச் சேர்த்துக் கொள்கிறார்கள். அவர்களுக்கு அநேக சக்திகளையும ஸித்திகளையும கொடுக்கிறார்கள். அவைகளை யிவர்கள் தமக்கென்றுபயோகிக்காமல் பிறர்க்கென்று உபயோகிக்குமாறே இவ்வண்ணம் கொடுக்கப்படுகின்றன.

நரசிம்ம மூர்த்தி பிரஹ்லாதருக்கு அநேகம் வரங்களைக் கொடுதத காலத்தல், பிரஹ்லாதர் எனன சொன்னார்?

“இவ்வரங்களைக் கொடுத்து என்னைப் பரீக்ஷிக்கவேண்டாம். நான பிறந்தது முதலே அவைகளில் ஒன்றிற்கும் மயங்காமல், தங்களையடைந்து மோக்ஷமடைய வேண்டுமென்பதே என கருத்து.” என்று வணக்கமாய்க் கூறினார்.

அதற்கு நரசிம்ம மூர்த்தி சொல்கிறார்:—“நியாயந்தான். உன்னைப்போல் என்னிடத்தில் யார் யார் தமது ஹிருதயத

தைச் செலுத்துகிறார்களோ, அவர்கள் ஒன்றையும் விரும்பார்கள். ஆயினும் இம்மன்வந்தரத்திற்கு மட்டும் தைத்ய அரசர்களுக்கெல்லாம் தலைமை கொண்டிருப்பாய். உனது புண்ய கருமங்களுக்குத் தக்க நற்பயன்களை யநுபவித்துப் பாபங்களுக்குப் பரிகாரார்த்தமாக புதிய பல நற் கார்யங்களைச் செய்ய உலகத்தவர்க்கு நன்மாதிரியாக உன்து நற்புகழை நாட்டிப் பிறகு என்னை வந்தடைவாயாக. உன் கீர்த்தியை ஸ்வர்க்க லோகத்தவர்களெல்லாம் பாடட்டும்."

ஆகையால் எவர்களிடம் சுயநலம் குன்றிப் பிறர் நலம் மேலாகவிருக்கிறதோ, அவர்கள் தான் சுத்தி முனைபோன்ற நிவிருத்தி மார்க்கத்திற் செல்ல அருகர்கள். தங்கள் வாழ்வை அதி பரிசுத்தமாய்க் கழிக்கிறவர்கள் தான் பிறரைச் சாந்தமாய் வழிநடத்தக்கூடும். இத்தகையார் தான் அவரவர்களுடைய வைராக்யத்திற்கும் சித்திகளுக்கும் தக்கபடி ஓரோர் அதிகார ஸ்தானத்தை யடைகிறார்கள். வேலை பார்க்கவேண்டும் அதிகாரம் செலுத்தவேண்டுமென்ற ஆவல் யார்க்குளதோ, அவர்கள் தான் பிரவிருத்தி மார்க்கத்தில் வேலை பார்க்கலாம். ஆனால் உத்யோக ஸ்தானங்களை வகிக்கவேண்டுமென்ற அவா வில்லாதவர்கள் தான் நிவிருத்தி மார்க்கத்தில் வேலை பார்க்கத்தகுதியானவர்கள். அவர்களிடத்துத் தான் அஹங்காரம் குறைய ஆரம்பிக்கிறது. தமது சக்தி ஒன்றையும் தவறு யுபயோகிக்கலாகாது என்றுணருகிறார்கள். அவர்கள் தமது உத்தரவாதத்தையும் பொறுப்பையும் பயபக்தியுடன் நிறைவேற்றுவார்கள்.

ஆகையால் ஒவ்வொரு ஜீவனும் எப்போதாவது ஒருதரம் ஓர் அதிகார புருஷராக வேண்டியதவசியம். ஸ்தூல லோக வாழ்க்கையில்பட்ட கடன்களைத் தீர்ப்பதற்காகவே அவர்கள் உலக குடும்பத்தை ஸம்ரக்ஷித்து பொது ஜனங்களுக்காக உழைக்கிறார்கள். ஒவ்வொரு குடும்பியும் ஓர் வகையில் ஓர் அதிகாரி புருஷர் என்னலாம். அவர்கள் தம் பொறுப்பை உத்தரவாதமாய் நிறைவேற்றின போதிலும், வீடு

பெறுவதிலேயே தான் கண்ணுயிருப்பார்கள் ஏனெனில் அப்பொறுப்பினுல் ஏற்படும் கட்டுப்பாடு அவர்கட்கு இவ்வளவு அவ்வளவு என்கமுடியாது. இப் பந்தத்தைச் சாமானியமென்று கூறமுடியாது. இதற்குப் பிறகுதான் யாரும் மோக்ஷத்தைப் பற்றி நினைக்கலாம்.

"பிரஹ்மாவும் மஹரிஷிகளும் தமது ஆளுகை எப்போ தொழியுமென்று காத்துக்கொண்டு பரமாத்மாவினிடத்தில் ஒன்றுபட்டு வேற்றுமையுணர்வே நசிக்கவேண்டுமென்றும் காத்துக்கொண்டிருக்கிறார்கள்." என்று பகவான் சங்கராசாரியாரவர்கள் கூறுகிறார்கள்.

ஆகவே பிரவிர்த்தி மார்க்கத்தில் காமமாயிருந்தது பக்தியாயிற்று. அதாவது எல்லாவற்றினிடத்தும் அன்பு பூண்டு எல்லாம் பரமாத்மா என்னும் விசாலபுத்தியோடு உழைப்பதேயாம். எவனெருவன் இந்த பக்தியைக் கைக் கொள்கிருனே அவன் எல்லா ஜீவர்களேயும் பரமாத்மாவின் குழந்தைகளாக மதிக்கிறான்.

விஷ்ணு புராணத்திற் கூறப்பட்டுள்ளபடி சர்வ பூதங்களிடத்தும் ஹரி வசிக்கிறார் என்பதை யறிந்து எல்லாவற்றினிடத்தும் அன்பு பூண்டு, எல்லாவற்றினுடைய நன்மைக்குமாக ஞானியானவன் உழைக்கிறான். ஏனெனில் சர்வ பூதங்களும் ஹரியேதான்.

பிரவிருத்தி மார்க்கத்தில் தர்மத்தைச் செய்து பொருளைச் சம்பாதித்துப் பிறகு இன்பம் எய்துவது போல், நிவிர்த்தி மார்க்கத்தில் முதலில் பக்தியையும், பிறகு சக்தியையும், அதன் பிறகு முக்தியையும் பெறுகிறான்.

கிருஷ்ண பகவான் உத்தவருக்கு உபதேசித்த விடத்தில். "மநதை ஜயித்து அதன் மூலமாய் இந்திரியங்களேயும் பிராணனேயும் ஜயித்து, அம்மநதை எவன் என்னிடத்துச் செலுத்துகிறானே, அவனுக்கு ஐசுவர்ய சித்திகள் ஏராளமாய் வரக் காத்திருக்கின்றன. அவனுடைய ஆக்ஞையானது என்னுடையதைப் போலவே அவ்வளவு பலமுள்ளது.

எவனுடைய மனது பக்தியினால் பரிசுத்தம் பெற்று நிஷ்களங்கமாய் ஒரு நிலைப்பட்டிருக்குமோ அவன் முக்காலத்தையும் நோக்குவான். அநேக ஜன்மங்களுக்கு முந்தியும், அநேக ஜன்மங்களுக்குப் பிந்தியும் தன் திருஷ்டியைச் செலுத்துவான். சர்வ சித்திகளுக்கும் நானே ஈசுவரன். பிரஹ்மவாதிகளும், ஸாங்கிய சாஸ்திரமும், யோக சாஸ்திரமும், கூறுகின்ற தர்மம் யாவும் என்னிடமிருந்தே பிறக்கின்றது.'' என்றார்.

ஸ்தூல உலகத்திலும் அரசனுடைய பலம் எத்தன்மையது, பாருங்கள். ஜனங்களுடைய பலம் அனைத்தும் ராஜாவினிடமிருந்தல்லவா வருகிறது. எந்த அதிகாரமும் எந்த சக்திகளும், எந்த சொத்துக்களும் நமக்கு அரசனிடமிருந்தே கிடைக்கின்றன. விசேஷ யோக்கியதை உள்ளவர்களை அரசன் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு சன்மானம் கொடுத்துத் தன் உத்தியோகத்தில் அவர்களை யமர்த்திக் கொள்கிறான். அல்லது பொதுச்சட்டங்களை ஏற்படுத்தி, அவைகளின்படி நடக்கிறவர்களுக்குச் சிற்சில உரிமைகளையும் தருகிறான். ஸூர்யமண்டலத்தின் அரசாட்சியும் இதைக்காட்டிலும் அதிக ஏற்பாட்டுடன் நடக்கிறது எனெனில், எல்லா ஜந்துக்களும் உண்மையில் ஈசுவரனுடைய பொறிகளேயாம். பரப்பிரஹ்மத்தை யடைவதற்கு முன் ஆத்ம விளக்கம் மிகுந்துள்ள ஈசுவரனையே நாம் முதலில் வழிபடவேண்டும். அதற்கு ஆத்மவித்யா குருக்கள், மிகத் தாழ்ந்தபடி முதல் அதி உயர்ந்தபடி வரைக்கும், பற்பலா உளர். அவர்களெல்லோரும் வெளி வேஷத்தை யின்றி குணத்தையே பெரிதும் வற்புறுத்துவர். ஆத்மாவினாலே, தூண்டப்பட்டு சகல கார்யங்களையும் செய்வர். ஒற்றுமையையும் நன்மையையுமே கடைப்பிடித்து நிலை நிறுத்துவர். எனெனில் ஒவ்வொரு மந்வந்தரத்திலும் தீமையும், ஒற்றுமையின்மையும், உதிர்ந்து போகின்றன. ஒற்றுமையின்மையானது எப்போதும் பலஹீனமேயாம்.

(தொடரும்.)

பி. எஸ். ராமசுப்பையர்.

பிரஹ்மக்ஞான தரிசனம். (பாலபாடம்.)

32-வது அத்தியாயம்.

மானச லோகம்.

புவர்லோகத்துக்கு அடுத்தது மானசலோகம். கீழேயிருந்து எண்ணும்போது அது மூன்றாவது லோகமாகிறது. அது புவர்லோகத்தை விட ஒருபடி உயர்வும் நேர்த்தியுமானது. அது இரண்டு பெரும்பாகங்களாகப் பிரிந்திருக்கின்றது. மேற்பாதியில் மூன்று உட்பிரிவுகளும் கீழ்ப்பாதியில் நான்கு உட்பிரிவுகளும் இருக்கின்றன. மனிதனுடைய மானச சரீரமானது கீழ்பாதியிலுள்ள நான்கு உட்பிரிவுகளின் திரவியங்களால் அமைக்கப்பட்டிருப்பதினாலே அவனுடைய பூலோக ஜீவ தசையில் சுறுசுறுப்பாய் மனதினால் வேலை செய்துகொண்டிருக்கும்போது மேற்சொன்ன கீழ்ப்பாதி லோகத்தில் வசிக்கிறான்.

நாம் நினைக்கும்போதெல்லாம் மானச லோக திரவியத்தை உபயோகிக்கிறோம். ஏனெனில், ஒவ்வொரு எண்ணமும் வேலை செய்ய ஒரு பிரகிருதியை வேண்டுகிறது. மானசலோகப் பிரகிருதியானது எண்ணத்துக்கு அனுகுணமாய் சலிக்கிறது. எண்ணம் தவிர வேறொன்றும் அந்த லோகத்தில் வசிக்கவாவது அந்த திரவியத்தை உபயோகிக்கவாவது அதில் ஒரு பயனையுண்டு பண்ணவாவது முடியாது. எப்படி புவர்லோக திரவியமானது இச்சைகளால் அல்லது இச்சா சம்பந்தமான எண்ணங்களால் சலிக்கின்றதோ, எவ்விதம் பூலோகப் பிரகிருதியானது செய்கைகளினால் சலனத்தை யடைகின்றதோ, அப்படியே மானச திரவியம் எண்ணங்களால் சலனத்தை யடைகின்றது. சுத்தமான எண்ணங்கள் மட்டும் சுவர்க்க லோகத்தையடையும். ஆகையால் அங்கே உள்ள ஒவ்வொருவரும் பூர்த்தியான சந்தோஷத்துடனிருப்பார்கள். அவர்களுடைய ஆனந்தத்தையும், மனச்

சமாதானத்தையும், இன்னவித மிருக்குமென்று நம்மன தில் உருவகப்படுத்தமுடியாது. அது நம்முடைய சிற்றறி விற்கு எட்டாது. இவ்விதமாய் மானசலோகமென்ற சுவர்க் கமும் சுத்தமான எண்ணமும் ஒரே பொருளை உணர்த்து கின்றது. நாம் சுவர்க்கமென்று சொல்லுகிற அந்த பாகம் தான் மானசலோகம். ஆகையால் நாம் எண்ணங்களை முற்றி லும் சுத்தமாக வைத்துக்கொள்வோமேயாகில், இறந்துபோ வதற்கு முன்னமேயே நாம் ஸ்வர்க்கத்திலிருக்கலாம். ஆனால் நாம் ஸ்தூல சரீரத்தில் வசித்துக்கொண்டிருக்கும்போது இவ்விதம் செய்வது அசாத்தியம். ஏனென்றால் நம்முடைய ஸ்தூல சரீரம் இச்சைகளால் நிறைந்தும் எப்போதும் சில பொருள்கள் வேண்டுமென்று விரும்பிக்கொண்டும் இருப்ப தினாலே நம்முடைய எண்ணங்கள் இச்சைகளுடன் கலந் தேயிருக்கும் சுத்தமான எண்ணங்கள் தவிர மற்றவைகள் சுவர்க்கத்திற் பிரவேசிக்கத் தடைபட்டிருக்கின்றன. அது சமாதானமும் ஆனந்தமும் பூர்ணமான இடம். மஹான் களாயிருக்கும் மகரிஷிகள் தங்களைச் சுற்றிலும் தங்களுக்கு ள்ளும் சுவர்க்கத்தை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அதினால்த்தான் அவர்களுடைய சரீரம் க்ஷீணிக்கிறதில்லை. அவர்களுடைய ஸ்தூல சரீரம் இளைப்பாற வேண்டுமேபோது அவர்கள் நேராக சுவர்க்கத்துக்குப் போய் பூலோக சம்பந்த மான மற்ற விஷயங்கள் தங்களை அணுகாமல் தடுப்பார்கள்.

நாம் சுவர்க்கத்துக்குப் போகும்போது நம்முடைய ஆசைகளெல்லாம் நம்மை விட்டு நழுவிப் போகின்றன. சுத் தமான எண்ணங்களும் கலப்பான எண்ணங்களின் சுத்த மான பாகமும் மட்டும் கூடவருகின்றன. இவ்விதமாய் சிலர் மற்றவர்களை விட அதிகமாய் சுவர்க்கத்துக்குக் கொ ண்டு போவார்கள். ஆனால் எல்லோரும் அதிக திருப்தியு டன் அவரவர்கள் கொண்டுபோன அளவுக்குத் தக்கபடி பூர்த்தியான ஆனந்தத்தையும் சமாதானத்தையும் அனுப விப்பார்கள்.

நாம் பார்க்க விரும்புகிற அன்புள்ள சிநேகிதர்கள் அங்கேயிருக்கிறார்கள். ஏனெனில் அவர்கள் மறுபடியும் பூமியில் புனர் ஜன்மம் எடுத்திருந்தாலும் கூட அவர்களைப் பற்றிய நம்முடைய மானச ரூபமானது உயிருள்ள பிம்பம்போலிருக்கும். நம்மைப்பற்றி அன்புடன் அவர்கள் நினைக்கும்போதெல்லாம் அந்த அன்புள்ள எண்ணமானது மேற்சொன்ன பிம்பத்தை பூரித்து அவர்கள் நல்ல நிலைமையிலிருந்த காலத்தில் எவ்வித ரூபத்துடனிருந்தார்களோ அதே ரூபத்தைக் காட்டிக்கொண்டிருக்கும். அவர்கள் சுவர்க்கத்தில் வசித்துக் கொண்டிருப்பார்களாகில் அவர்களுடைய பூர்ண அன்பும் ஆனந்தமும் அவர்களிடம் நன்றாய் பிரகாசிக்கும்.

இது எப்படியிருந்த போதிலும் நாம் எப்போதும் திருப்தியுள்ளவர்களாகவும் பூர்த்தியான ஆனந்தமுள்ளவர்களாகவுமிருப்போம். மானச லோகத்தைப்பற்றியும் நம்முடைய மானச சரீரங்களைப் பற்றியும் நாம் நன்றாய்த் தெரிந்துகொண்டிருந்தால் இறந்துபோகு முன்னாலேயே மேற்சொன்ன விஷயங்களை யெல்லாம் நாம் பிரத்தியக்ஷமாயறியலாம்.

சுவர்க்கலோகத்திலிருக்கும்போது சென்றுபோன நம்முடைய பூலோகதசையில் நமக்கு நேர்ந்தவைகளை யெல்லாம் நினைத்துப் பார்த்து அடுத்த ஜன்மத்துக்கு வேண்டிய பலத்தை சேகரிக்கலாம் அல்லாமலும் வரும் ஜன்மமானது சென்ற ஜன்மத்தை விட அதிக உறுதியுள்ளதும் அதிக சுத்தமுள்ளதும் சுபநயம் பாராட்டாத் தன்மையுள்ளதாயுமிருக்கும்படி செய்யலாம். ஒரு ஜன்மத்துக்கும் மற்றொரு ஜன்மத்துக்கும் இடையில் ஒவ்வொருவரும் சுவர்க்க லோகத்துக்குப் போகிறார்கள். நாம் அயோக்கியர்களென்று எண்ணும் ஜனங்கள் கூட கொஞ்ச காலத்துக்காவது சுவர்க்கம் போவார்கள். ஆனால் நல்ல ஜனங்களுடைய சுவர்க்கானுபோகத்திற்கும் அவர்களுடைய அனுபோகத்திற்கும் அதிக வித்தியாசமுண்டு. ஏனென்றால் அவர்களுடன் கூடவரக்கூடிய நல்ல எண்ணங்கள் அவர்களிடம் அதிகமாயிராது.

வி. வெங்குசாமி ஐயர்

ஜீவகாருண்யம்.

(95—ஆம் பக்கத்தொடர்ச்சி.)

இன்னுமொன்று கவனியுங்கள். சத்திக்குச் செலுத்தும் பிரார்த்தனைக்காக நீங்கள் விரதமிருக்கிறீர்களல்லவா? அப்பொழுது நீங்கள் மாமிசஞ்சாப்பிடுவதுண்டா? சத்திக்குப் பலியிடுவதென்பது சாரியாயிருந்தால் விரதகாலங்களில் மாமிசம் சாப்பிடலாமல்லவா? அப்படி எந்த விரததினத்திலாவது நடக்கிற வழக்கமில்லையாகையால் அறியாமையால்ச்செய்த காரியங்கள் நீங்கவேண்டிய காலம் சமீபித்துவிட்டது. எல்லா உயிர்களும் கடவுளுடைய பிள்ளைகள் என்ற உண்மையை மனதிற்கொண்டு ஜீவகாருண்யமே விரதமாகக் கொள்ளக்கடவோமாக.

சகோதரிகளே!

உங்களை ஒன்று கேட்டுக்கொள்கிறேன். பூமிதேவியைப்போன்ற பொறுமையும் பரமேசுவரியைப் போல் அன்பும் உடையவர்கள் நீங்களல்லவா? உங்கள் குழந்தைகளுக்கு வியாதி வந்தால் நீங்கள் மருந்து சாப்பிட்டு சௌக்கியப்படுத்துவீர்களே. உங்கள் குழந்தையை இன்னொருவர் குழந்தை விளையாட்டுக்காகவாவது அடித்தால் உங்கள் மனங்கேளாதே. உங்கள் குழந்தைகளின் சரீரத்தில் ஒரு பாகத்தையாவது சரீர முழுமையுமாவது அறிவாள்மணையில்வைத்து அறுக்கச்சொன்னால் மனந்துணிந்து அறுப்பீர்களா? அன்னியர்களுடைய பிள்ளைகளையாவது அறுக்க உங்கள் மனம் சம்மதிக்குமா உங்கள் மனம் மிகவும் அன்புடையது. உங்கள் கை அன்பே உருவமாயமைக்கப்பட்டது. நீங்கள் அன்புடையவர்கள். உங்களை ஈசுவரன் அன்பைக்கொண்டே சிருஷ்டித்தானென்று கூடச்சொல்லலாம். அப்பேர்ப்பட்ட அன்புடைய நீங்கள் வாயால் உங்கள் பாஷையில் பேசத்தெரியாததும் நீங்கள் ஒருநாள் உணவு கொடுத்தாலும் அந்த விசுவாசத்தை என்றும் மறவாமல் உங்களைப்பின் தொடருகிற ஆடு, கோழி முத

லிய எளிய பிராணிகளை வதைத்து கொடுமைசெய்து அறிவாள்மணையிலிட்டு அறுக்க உங்கள் மனஞ்சம்மதிக்கின்றதே! கழுத்தை திறுக உங்கள் கை கூசவில்லையே! உங்களைப்போலவும் உங்கள் குழந்தைகளைப்போலவும் ஆடு, கோழிகளும் ஓர் தாய் பெற்றபிள்ளைகள் தானே! "காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சல்லவா?" உங்கள் குழந்தை யிறந்தால் நீங்கள் வடிக்கும் கண்ணீருக்கு அளவில்லையே. இறந்துபோன குழந்தைகளின் சரீரத்திலாவது சிறிய காயம்பட நீங்கள் சம்மதிப்பீர்களா? சம்மதப்படமாட்டீர்கள். உங்கள் கையால் முட்டைகளை உடைக்கிறீர்களே. உங்கள் வயிற்றில் உண்டாகும் கருவைப்போல அந்த முட்டைகளும் ஓர் பறவையின் கருவல்லவா? உங்கள் கரு எப்பொழுதாவது கலைந்துபோனால் நீங்கள் படுந்துயரம் சொல்லிமுடியுமா? முன் ஜன்மத்தில் கருவழித்தவர்கள் இந்த ஜன்மத்தில் கருவுண்டாகாமல் தவிக்கிறதை நீங்கள் பார்த்தாவது முட்டைகளை உடையாதீர்கள்.

உலகத்தில் உங்களுடைய அன்புதான் பெருமையுடையது. நீங்கள் தான் அன்பின் இருப்பிடம். பேரன்புடைய நீங்கள் கொடுமைசெய்வதை விட்டுவிட்டால், கொலைசெய்வதை விட்டுவிட்டால், புலால் உண்ணுவதை விட்டுவிட்டால், உங்களை உலகம் புகழுமே. உங்கள் வயிற்றில் பிறந்த என் போன்ற ஆண்பிள்ளைகளும் நல்ல வழிக்கு வந்து விடுவார்களே. நீங்களல்லவா உங்கள் சந்ததியை நல்வழிக்குத் திருப்புந் திறமையுடையவர்கள். உங்கள் கையில் உங்கள் குழந்தைகளின் வாழ்க்கை ஒப்புவிக்கப்பட்டிருக்கிறதென்பதை அறியுங்கள். இங்குக் கூடியிருக்கிற உங்களில் அநேகர் க்ஷத்திரிய ஜாதியில் பிறந்தவர்கள் வீரத்தாய்மார்கள். உங்களுடைய குல தருமம் பிறர்க்குத் தீமை செய்யாமலிருப்பதுமட்டுமல்ல. தீமைகள் வந்தால் விலக்குவதுமாகும். ஆகையால் இன்று முதல் நீங்களெல்லோரும் ஜீவகாருண்யத்தை கடைப்பிடியுங்கள். ஊன் தின்பதை விடுங்கள். கடவுள் உங்களை ஆசீர்வதிப்பார். சுபம். சுபம்.

எவ்வுயிரும் என்னுயிர்போல் எண்ணி இரங்கவு நின்
தெய்வ அருட்கருணை செய்வாய் பராபரமே.

இராமானந்தயோகிகள்.

பம்பாய் ஸ்ரீ ஜீவதயாஞான பிரசாரக நிதியின் 7ம் வருஷத்திய அறிக்கை.

எமது பார்வைக்கு இந்த உபயோகமுள்ளதும் வெகு, அழகாய் அச்சிடப்பட்டதும் நிதியின் ஆச்சரியகாமான முயற்சிகளை வெளியிடுவதுமான அறிக்கைப் புத்தகத்தை அனுப்பிய மேற்கூறிய நிதியின் கௌரவ மானேஜரவர்களாகிய ஸ்ரீமான் லாலுபாய் குலாப்சந்த ஜாவேரி யவர்களுக்கு எமது மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகிறோம். வருஷத்துக்கு வருஷம் இந்நிதியானது ஒவ்வொரு விதத்திலும் புரோவிருத்தி யடைந்து வருவது யாவருக்கும் சந்தோஷத்தை விளைக்கும். இந்நிதியின் முக்கியமான முதல் நோக்கமானது உலகத்தில் மாமிசம் உண்கிறவர்களின் சங்கையைக்குறைத்து சாகங்களை உண்கிறவர் சங்கையை அதிகரித்தல்என்னலாம். **अहिंसा परमो धर्मः** என்ற நீதிவாக்கியமானது இந்தியாவில் ஹிந்துக்களால் முக்கியமான ஸநாதன தர்மத்தின் விதியாகக்கொள்ளப்பட்டது. மேலும் இந்தியாவில் ஒரு பிராணிக்கும் ஒருவிதமான ஹிம்ஸையும் இழைக்கக் கூடாதென்ற முக்கிய கொள்கைகளையுடைய ஜைனர்களும்இருக்கிறார்கள். அப்படியிருந்தும் ஆகராத்திற்காக எத்தனையோ பேர்கள் பிராணிகளை வதைக்கிறார்கள்! இது அறியாமையினாலன்றோ? இவ்வறியாமையை எங்ஙனம் நீக்குவது? மேற்கூறிய நிதியைப்போல் பலநிதிகளைப் பற்பல நகரங்களில் ஸ்தாபித்து ஆங்கிலத்திலும், தமிழிலும் சாக பக்ஷணமானது மாமிச பக்ஷணத்தைவிட ஆரோக்கியத்தையும், பலத்தையும் கொடுக்க் வல்லது என்ற அறிவைப்பரவச் செய்யவேண்டியது அவசியம். சென்னை ராஜதானியில் கூட இந்நோக்கம் கொண்ட சில சங்கங்களிருப்பதாகத் தெரிய வருகிறது. மேற்கூறிய நிதியானது மிகவும் மெச்சத்தக்க பெருமுயற்சிகள் எடுத்துக்கொண்டு அதிக நன்மை பயன்றிருக்கின்றது. அதைப்போல் இம்மாகாணத்தில் உள்ள சங்கங்கள் உழைக்கவில்லை. இந்நிதியின் முயற்சியினால் ஆயிரக்

கணக்கான பேர்கள் ஊனை விலக்கியிருக்கிறார்கள் என்று அறிய மிகவும் ஆனந்த மடைகிறோம்.

சிறுதேவதைகளுக்கும், காளியம்மனுக்கும், ஆடு, எருமை முதலிய பிராணிகளை பலியிடுவதால் பிரீதியுண்டாகிறதென்ற காரணங்களால் அநேக இந்துக்கள் அநேகமாயிரம் பிராணிகளை கத்திக்கிரையாக்குகிறார்கள். அது எவ்வளவு மதியீனம்! இவ்விஷயத்தைக்கண்டித்து நமது பத்திரிகையில் அடிக்கடி எழுதியிருக்கிறோம். ஆனால் நம்மவரிடம் ஒரு பெரிய தீயவழக்கம் இருக்கின்றது. அதாவது ஒரு காரியம் தீயது என்று நன்குணர்ந்த போதிலும் அதைப் பிறர் செய்யாமலிருக்கும்படி தவிர்க்க ஒருமுயற்சியும் செய்யாமலிருத்தலேயாம். இந்நிதியின் பெருமுயற்சி காரணமாக பாருகச்சம் என்றும் புரோச் என்றும் அழைக்கப்படும் நகரத்தில் சென்ற வருஷம் நவராத்திரி காலத்தில் ஸிம்ஹவாஹினி யென்ற அம்பாளுக்கு யாதொரு மிருகபலியும் கொடுக்கிறதில்லை யென்று தீர்மானிக்கப்பட்டது. அவ்விதமே இனிமேல் மிருகபலியை ஸ்திரமாக நிறுத்தி விடப்படும் என்று நம்புகிறோம். டார் என்ற ஹிந்துராஜ்யத்தின் மகாராஜா அவர்களுக்கு இந்நிதியாருடைய முயற்சியால் பம்பாயில் உள்ள பெரிய மனிதர்கள் ஒரு மனு அனுப்பினார்கள். அதன்பயனாக நவராத்திரியில் ராஜ்யமுழுமையிலும் எருமைகளைப் பலியிடுவதை நிறுத்திவிடப்பட்டது? என்று உத்தரவு கிடைத்திருக்கின்றதாய் தெரியவருகிறது. ஆடு முதலிய இதர பிராணிகளையும் பலியிடக் கூடாதென்று உத்தரவானால் இன்னும் திருப்தியாயிருக்கும்.

பம்பாயிலும் அந்த ராஜதானியிலுள்ள மற்ற நகரங்களிலும் அநேக கூட்டங்கள் கூட்டுவித்து அவைகளில் அநேக பிரமுகர்களைக்கொண்டு அநேக உபந்யாசங்கள் நடத்தியிருக்கிறார்கள். இவ்வித முயற்சிகளால் கிடைக்கும் லாபத்துக்கு அளவில்லை.

பம்பாய் முனிசிபாலிட்டியில் வயது சென்ற மாடுகளை சொற்மான தொகைக்கு ஏலம் போடுகிறார்கள். கசாப்புக் கடைக்காரர்கள் அவைகளை வாங்கி கொன்று இறைச்சி

யாக விற்கிறார்களாம். இதேமாதிரி மற்ற நகரங்களிலும் நடக்கிறதாம். வாழ்நாள் முழுதும் உழைத்து தன் பலமனைத்தும் தத்தம் செய்த இந்தக்கால்நடைகளை அந்தியகாலத்தில் ஆகாரம் கொடுத்து ரக்ஷியாமல் கத்திக்கு இரையாக்குவது என்ன கொடுமை! "பிஞ்சரபோல்" என்ற ஜீவரக்ஷா சாலைகளில் இம்மாடுகளை ஒப்புவித்து அவைகளைக் காப்பாற்றமாட்டார்களா. அல்லது அவைகள் இறக்கும் வரை அவைகளுக்கு இரை கொடுத்துக் காப்பற்றுவது மிகவும் செல்வம் படைத்த பம்பாய் முனிபாலிட்டிக்கு முடியாததா? ஆனால் இதைப்பற்றி அவர்கள் யோசித்தாலல்லவா அவர்கள் மனதில் இரக்கம் தோன்றும்.

ஜுனகாத் என்ற ஒரு மகமதிய ராஜயத்தில், அரசாங்கத்தாருக்கு வேலைசெய்ய முடியாத மாடுகளையெல்லாம், அந்நகரில் உள்ள ஜீவரக்ஷாசாலைக்குக் கொடுத்து விடுவதாகவும் அந்த சாலையில் உள்ள மிருகங்கள் பேரில் ஒரு வரியும் விதிக்கக்கூடாதென்றும், அந்த மிருகங்கள் இறந்த பிறகு அவைகளின் தோல்களின் பேரிலும் வரி போடுவதில்லையென்றும் உத்திரவாகியிருக்கிறதாம். இதுவும் ஒருமுக்கிய தர்மமாகும்.

சத்திரபூர் மகாராஜா அவர்கள் தங்களுடைய ராஜ்யத்தில் கோவில்களில் தேவதைகளின் பிரீதிக்காகவென்று மிருகங்களைப் பலியிடக்கூடாதென்றும், ஆகாரத்திற்காவது மற்ற காரியத்திற்காவது பிராணிகளைக் கொலை செய்யக்கூடாதென்றும், வேட்டைகள் கூட ஆடக்கூடாதென்றும், உத்திரவு செய்திருக்கிறார்களாம். இது ஹிந்துக்களனைவருக்கும் மற்றும் தயை நிறைந்த யாவருக்கும் களிப்புண்டாக்கும்.

இங்கிதியார் ஏராளமான துண்டுப் பத்திரிகைகளையும், சிறு புத்தகங்களையும் இலவசமாக ஜனங்களுக்குக் கொடுத்துதவுகிறார்கள்.

(1) சாகபக்ஷணம் சௌக்கியத்துக்கும் பலததுக்கும் எற்றது.

(2) தேவதைகளுக்குப் பலியிடுவது மதத்திற்கு விரோதமானது.

(3) பிராணிகளை வதைத்துவரும் விதங்கள்.

என்று மூன்று விஷயங்களைப்பற்றி வியாசங்கள் எழுதும்படி பிரசுரம் செய்து அவைகளில் மிகவும் முதன்மையான வியாசங்களுக்கு பரிசிலளித்திருக்கிறார்கள். இதனால் அநேகர் இவ்விஷயங்களைப் பற்றிச் சிந்தனை செய்து வியாசங்கள் எழுதக்காரணமாகிறது.

நாம் அழகென்று நினைத்து குதிரைகளின் வால்களை நறுக்குகிறோம். நாய்களின் வால்களைக் கத்தரிக்கிறோம். முன் யோஜனையின்றி பக்ஷிகளைக்கூட்டில் அடைக்கிறோம். அசிரத்தையினாலும், சோம்பேரித்தனத்தினாலும் இழுக்கமுடியாத பாரத்தை ஏற்றி மாடுகளை இழுக்கும்படி செய்யும் பாபங்களைக் கண்ணுற்றும் ஒன்றும் செய்யாமலிக்கிறோம். இவ்வறிக்கைப் பத்திரிகையானது நம்முடைய கனிஷ்ட ஸகோதரர்களாகிய மிருகங்களின் மாட்டு நம்முடைய கடமைகளை துலக்கிக்காட்டுகின்றது.

பம்பாயில் வியாபாரம் அதிகம். செல்வவான்களும் அதிகம். அவர்கள் செல்வம் படைத்திருப்பது பெரிதல்ல இந்நிதிக்கு வேண்டிய பொருள் தந்து இந்நிதியை நடக்கும்படி செய்திருப்பதே பமபாய்க்குப் பெருமையாகும். ரூ 18,353—2—0 வரும்படியும் ரூ 12,745—0—8ம் செலவும் இவ்வருஷத்தில ஏறபட்டிருக்கிற தென்று கேட்க சந்தோஷமடைகிறோம். இந்நிதியானது தினே தினே அபிவிருத்தியாகுக. இம்மாதிரியே நமது சென்னை மாகாணத்திலும் ஜீவதயையானது பரவு மாறு எல்லாம்வல்ல இறைவனை யிறைஞ்சுவோம்.

தார்மிக பிராமண சங்கம்.

இச்சங்கத்தின் காரியதரிசியும் ரிடையர்டு டிப்டிகலக்டருமான ஸ்ரீமான் டி. வி. கோபால சுவாமி ஐயர் எழுதுகிறார்.

அடையாற்றை ஸ்திரமான வாஸஸ்தலமாகக்கொண்டு தார்மிக பிராமண சங்கமானது ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இரண்டு வருஷங்களுக்கு முன் ஸ்தாபிக்கப்பெற்ற இச்சங்கத்தில் 120 பேர் அங்கத்தினராயும் அனுதாபர்களாயும் சேர்ந்திருக்கிறார்கள்.

இச்சங்கத்தின் நோக்கங்களாவன:—

(1) கீழ்ஜாதியில் பிறந்தவன் என்று ஒருவனை நெருங்காமலிருக்கும் வழக்கத்தை நிறுத்தல்.

(2) திருஷ்டி தோஷத்தைப் பாராட்டாதிருத்தல். பிராமணர் பாகம்செய்ததும், மதுமாம்சவிலக்கானதுமான, உணவை சகல வர்ணத்தாரும் சகபோஜனம்செய்தல்.

(3) பிராமணர்க்குள் சகல வகுப்பாரும் உள் வகுப்பு வித்தியாசம் பாராட்டாமல் பெண்களை ஒரு உள் வகுப்பிலிருந்து மற்றொரு உள் வகுப்புக்காரர் அங்கீகரித்தல். இதன் மூலம் பிராமணர்களுக்குள் வகுப்புகளை ஒருமைப்படுத்தல்.

(4) வரனுக்கு 20, வயதுவுக்கு 16 வயதுக்கு முன் ருதுசாந்திக்கல்யாணம் நடத்தாதிருத்தல்.

(5) (i) ருதுமதீ விவாஹம் செய்பவர்கள்,

(ii) கன்யா விதவாவிவாஹத்தில் சம்மந்தப்பட்டவர்கள்,

(iii) இந்தியாவுக்கு வெளியே சஞ்சாரம்செய்து நல்ல ஆசாரத்துடன் திரும்பிவந்திருக்கும் பிராமணர்கள், மற்ற ஹிந்துக்கள்,

இவர்களை ஹிந்துக்களுக்கு மத்தியில் யாதொரு அப்பியர்தாமன்னியில் ஏற்றுக்கொள்ளுதல்.

(6) மேற்கூறிய நோக்கங்களை நிறைவேற்றவும் இச்சங்கத்தின் அபிவிருத்தியைத் தேடவும் வேண்டியன செய்தல்.

2. இச்சங்கத்தின் நோக்கங்கள் ஆர்யசநாதன தர்மத்துக்கு மிகவும் பொருத்தமானவை. மகாபாரதத்தில் சொல்லியிருக்கிறபடி, தர்மம் என்பது ஒரு ஜாதியைச்சிதைவுறாமல் தாங்கிக் காப்பாற்றுகிறது எதுவோ அது. ஜாதியைக்கீழ்நோக்கிச் செல்லும்படிசெய்து அதைச்சீர்குலையவும் நசிக்கவும் செய்வது எதுவோ அது தர்மமாகாது. இந்திய ஜாதியின் முன்னேற்றம் சீக்கிரம் உண்டாகவேண்டுமென்று நாம் கோரினால் ஆசார சீர்திருத்தங்களைப்போல் அவ்வளவு முக்கியமான திருத்தங்கள் ஒன்றும் இல்லை. இந்தியாவில் ஆசாரமும் மதமும் ஒன்றுக்கு ஒன்று இணை பிரியாதவை. ஆகையால் ஆசாரத்திற்கும் மதத்திற்கும் இருக்கும் சம்மந்தத்தை நீக்கி ஆசார சீர்திருத்தத்தை மட்டும் கவனிப்பது மதியீனமாகும். அச்சீர்திருத்தங்களும் இயங்கும் சக்தியின்றி நிலைபெறா. இச்சங்கத்தின் நோக்கங்கள் சநாதன தர்மத்துக்குப் பொருந்தியவை யென்பதுமட்டுமல்ல. இச்சங்கத்தின் நோக்கங்களை நிறைவேற்றும்படி சநாதன தர்மமே வற்புறுத்துகின்றதென்னலாம். ஆகையால் இச்சங்கத்திற்கு தார்மிக பிராமண சங்கம் என்று பெயரிடலாயிற்று.

3. ஆதிகாலத்தில் இந்தியாவிலிருக்கிற ரிஷிகளும் தத்வ ஞானிகளும், ஞானமிகுந்து உண்மையை அறிந்தவர்களாயிருந்தார்கள். ஆனால் இக்காலத்தில் சாதாரணமாக ஜனங்கள் அந்த ஞானத்தை இழந்துவிட்டார்கள். ஆகையால் தான் ஜன சமூகத்தைப் பிணிபோல் பாழாக்கும் தீய வழக்கங்கள் இக்காலத்தில் நிகழ்கின்றன. அத்தீய வழக்கங்களைச் சீர்திருத்துவது தான் இச்சங்கத்தின் கருத்து. இக்

காலத்தில் ஜன சமூகத்தில் நிகழ்கிற அநேக வழக்கங்கள் மித்தியாசாரங்கள். வைதிக ஆசாரத்துக்கு மாறுதலானவை. ஆதி ஆரிய தர்மங்களுக்கு விரோதமானவை யாகும். இச்சங்கத்தார் நாளடைவில் துண்டுப் பத்திரிகைகளை வெளியிடுவார்கள். புராதன ஆரிய ஆசாரங்கள் என்ன வென்றும்; இக்காலத்தில் அவைகள் எப்படி கெட்டுப் போய், நிரர்த்தகமாய்ப் போய்விட்டன வென்றும், அதுவே ஆரிய ஜாதியே க்ஷீணித்துப் போவதற்கு காரணமாயிருக்கின்றது, என்றும் அவைகளில் விளக்கப்படும். ஆதிகால இந்திய ஆரியர்களின் சரித்திரத்தைப் படித்தால் ஆரியர்கள் எவ்வளவு சக்திமான்களாயும், பௌருடம்பெற்றவர்களாயும் உத்ஸாகிகளாயும், வீரச் செயல் வாய்ந்தவர்களாயும் முன்னேற்றமடைந்தவர்களாயும், இருந்தார்கள் என்பது வெளியாகும். கிருஸ்துவுக்குப் பிறகு சில நூற்றூண்டுகளுக்குள் கூட அப்படியே இருந்தது. அப்பால் நம் நாட்டில் ஆரியர் அடைந்திருக்கும் தாழ்மையான நிலையைப்பற்றி யாவரும் வருந்தாநிரர்கள். சென்ற 10 நூற்ருண்டுகளாக இந்தியாவில் சிறந்த தத்துவ ஞானிகள் சாஸ்திரிகள் முதலானவர்கள் தோன்றியிருக்கின்றனரா? ஜாதியே கெட்டுப்போவதற்குக் காரணம் ஆசாரங்களின் சிதைவே. அவைகள் இப்போது மிகவும் கெட்டுப்போய் விட்டன. ஜனஸமூகமே ஒருங்கே இச்சீர் குலைவை மாற்ற முயன்ருல் ஒழிய இச்சாதியே நாசமடையும் என்பதில் சந்தேகமில்லை. வர்ணுசிரம தர்மத்தினுல் தான் இந்தியாவானது இன்னும் நசிக்கவில்லை யென்றும், மற்ற புராதன நாகரீகங்களான பாபிலோனிய, அஸ்ஸிரிய, நாகரீகங்கள் நசித்துப்போனது வர்ணுசிரம தர்மத்தை யனுஷ்டியாததால் தான் என்றும் பலர் சொல்வார்கள் என்பது எங்களுக்குத் தெரியும். நம்மிடம் நடைபெறும் தீய வழக்கங்களிலும் கூட யாதொரு தீமையும் இல்லையென்று இவர் சாதிப்பர். இச்சாதனைகளைப் பற்றிச்சோதித்து தீயவழக்கங்களின் கெடுதிகளை வெளியிடுவோம். இக்காலத்துக்கு ஏற்ற ஆசாரத்தின் ஸநாதன உண்

மைகளைப் பரவச் செய்வோம். ஆசாரங்களின் ரஹஸ்யார்த்தங்கள் தான் உயிர். ஆசாரங்கள் உடலாகும். உயிர் ஒன்றேயாயினும் காலத்திற் கேற்ப உடல்களும் உருவங்களும் மாற வேண்டியது அவசியம். உயிர் இயங்குவதற்காகத் தான் உடல் ஏற்பட்டது. அது இயங்கிப் பிரகாசிப்பதற்கு ஏற்றபடி உடல் அல்லது உருவமானது இடந்தராமல் வளைந்து கொடுக்காமலிருந்தால், அவ்வுடலை விட்டு உயிர் நீங்கும். அவ்வுடல் பிணமாகும். அவ்வுடலை அனலுக்கிரையாக்கிட வேண்டும். அவ்வுடலாலால் கெடுதியே யொழிய நன்மையில்லை.

4. நாளடைவில் இச்சங்கத்தார் வெளியிடும் துண்டுப் பத்திரிகைகளின் புராதனத்தில் வழங்கிய ஆரியர்களின் ஜன சமூக ஏற்பாடானது எவ்வளவு பரிசுத்தமானதாயும் மேலானதாயும், உயிருள்ளதாயும், யுக்திக்கும் பிரகிருதி விதிகளுக்கும் ஏற்றவைகளாயும், இருந்தன வென்றும், இக்காலத்திய ஆசாரங்களின் தீமைக்குக் காரணங்கள் என்ன அவைகள் எப்படி வரவரக் கேடுறுகின்றன என்பதையும், காட்டப்படும். சம்ஸ்காரங்கள் விஷயமாயும் சிறு புஸ்தகங்களை வெளியிடுவதாய் உத்தேசம். அமுக்கியமான சடங்குகளையும், அனுவசியமான பாகங்களையும் நீக்கி முக்கியமாய் வேதங்களில் கூறியபடிக்கு கர்மங்களின் முக்கியாம்சங்கள் மட்டும் கூறப்படும்.

5. ருதுமதீ விவாகம் செய்யவும், கன்யாவிதவைகளை விவாகம் செய்யவும் சம்மதமாயிருக்கிற பிரஹ்மசாரிகளுடையவும் சம்மதமாயிருக்கிற பிரஹ்மசாரிகளுடையவும் (மனைவியிறந்து) புனர் விவாஹம் செய்ய உத்தேசிக்கிறவர்களுடையவும் ஜாப்தா ஒன்று காரியதரிசியவர்களிடம் இருக்கிறது. ருதுமதிகளாயிருக்கிற பெண்களுக்கும் கன்யா விதவைகளுக்கும் கல்யாணம் செய்யவேண்டுமென்கிற எண்ணமுள்ளவர்கள் காரியதரிசிக்கு எழுதலாம்.

ரிஷிகளின் உபதேசம்.

(ஸி. ஜினராஜதாஸர் அவர்களின் உபன்யாஸத்தை ஸங்கிரஹமாய் ஸி. இராமய்யர் அவர்களால் தெலுங்கில் எழுதப்பட்டு திவ்யஞான தீபிகையில் வெளிவந்ததை மொழி பெயர்த்தது)

இந்தியா தேசம் மிகவும் பிராசீனகாலத்திலிருந்து கியாதியைப்பெற்ற தேசமன்றோ? கிரீஸ், ரோம், முதலிய இராஜ்யங்கள் இருந்த காலத்திற்கு வெகுகாலத்திற்கு முன்னமே இந்தியாவானது மிகவும் நாகரீகத்தை யடைந்து பிரபலமாயிருந்தது. இப்பொழுது கிரீஸ், ரோம் ராஜ்யங்கள் எங்கே? பெயர்களை மாத்திரம் கேட்கிறோமே ஒழிய, மிச்சமெதுவும் புலப்படவில்லை யல்லவா? பரதக்கண்டம் மாத்திரம் ஏன் எப்பொழுதும்போல் இருக்கிறதென்பதை யோசித்தோமா? ஏனெனில், இந்தியாதேசம் பிரபஞ்சத்தில், மானிடகோடிகளுக்கெல்லாம் ஒரு உபதேசத்தை, ஒரு பாரமார்த்திக போதனையைக் கொடுக்கக்கூடிய தாயிருக்கிறது, நிகழ்காலத்தில் அவ்வித போதனையைச் செய்யவேண்டிய தாயிருக்கிறது. அக்காரணம்பற்றியே தான் எத்தனையோ பிராசீன ராச்சியங்கள் நசித்துப்போய் நாம மாத்திரமாயிருக்க பரதக்கண்டம் மாத்திரம் புராதன காலத்திலிருந்து ஜீவித்துக்கொண்டு இருக்கிறது. முதல் முதல் ரிஷிகள் பிரர்சீனபரதக்கண்டத்தில் ஜனங்களுக்குப் போதித்த விஷயங்களை நன்றாய் நாம் தெரிந்து கொண்டாலொழிய, இக்காலத்தில் அவர்கள் உபதேசம் எதுவோ அதைத்தெரிந்து கொள்ளமாட்டோம். நாம் ஒவ்வொருவரும் பகவத் விபூதிக்குப் பிரதிபிம்பமாக வேண்டும். அதாவது நமது பிரவிருத்திகளில் கடவுளின் உத்தேசத்தைத் தெரிந்துகொண்டு அனுஷ்டிக்கவேண்டும்.

ஆதியினின்று நமக்கொரு பாக்கியமுளது. ரிஷிகள் இருக்கிறார்க ளென்ற நம்பிக்கை நமக்கிருக்கிறதுபோல்

இதர தேசங்களில் ஸ்பஷ்டமாக வில்லை. ரிஷிகள் பூர்வகால த்திலிருந்தார்கள், இப்பொழுது மிருக்கிறார்கள். அவர்கள் பரிபூரணர்கள், ரிஷிகள் எனின் யாவர்? ரிஷி சப்தத்திற்குப் பார்க்கக்கூடியவர்களென்று அர்த்தம். எதைப்பார்க்கக் கூடியவர்கள்? தாங்கள் யோகாப்யாசங்களாலே தங்கள் சக்திகளைப் பரிபூரணமாக விகாசம் செய்துகொண்டு அந்த மனோ புக்திசக்திகளின் மூலமாய்ப் பகவானின் தத்துவத் தையும் அவருடைய ஆக்ஞையையும் ஸ்பஷ்டமாகக்கண்டு கொண்டவர்களென்று அர்த்தம். பகவத் உத்தேசம் இப் படிப்பட்ட தென்பதாக, எல்லாலோகங்களிலும் ஸ்பஷ்ட மாகத்தெரிந்து கொண்டவர்கள் ரிஷிகள். அவர்களே பதார்த்தமான சாஸ்திரக்ஞர்கள். அவர்கள் பார்த்த விஷய ங்களை புராணங்களிலும் கதைகளிலும் மறைவாயும் வியக்த மாயும் பலவிதங்களாகப் போதித்திருக்கிறார்கள். அவைக ளில் ரகசியங்கள் அனேகங்கள் இக்காலத்தில் கண்டுகொ ள்ள மிகவும் கஷ்டமானவைகளா யிருக்கின்றன. ஆனாலும் திவ்ய ஞான ஸமாஜகிரந்தங்கள் அந்த ரஹஸ்யங்களை வெ ளிப்படுத்திக் காட்டுகின்றன. அதன் மூலமாய் அந்த மறை வான அர்த்தங்கள் இக்காலத்தில் கிரஹிக்கக்கூடியவைக ளாயிருக்கின்றன.

ரிஷிகளின் உபதேசங்கள் நான்குபிரிவுகளாக இருக் கின்றன.

1. வேதங்கள் ஸம்ஹிதைகளின் மூலமாய்ப்போதிப் பதென்ன தென்னவெனில், இந்திரன், வருணன், அக்னி மருத்துக்கள் முதலான தேவதைகளைக் குறித்துப்போதிக் கின்றன. அக்னி, வருணன், மருத்து என்னும் பொழுது நாம் பூமியில் பார்க்கும் நெருப்பு, ஜலம், காற்று அல்ல வென்பதாகவும் அவர்கள் இந்தப்பதார்த்தங்களுக்கு அதி பதிகளாயுள்ள தேவர்களென்பதாகவும், இந்தத்தேவர்களை யே பூர்வகாலத்தில் பாரதீயர்களுக்குச் சகோதரர்களான கிரீக்கர்களும் ரோம் தேசஸ்தர்களும் பூஜித்துக்கொண்டி ருந்தார்கள் என்பதாகவும் தெரிந்து கொள்ளல்வேண்டும்.

இத்தேவர்கள் கண்ணிற்குப்புலப்படாத பிரபஞ்சத்திலிருப்பவர்களாயினும் அவர்களுக்கும் பூலோகவாசிகளான மானிடர்களுக்கும் இடைவிடாத சம்மந்தம் இருக்கிறது. பூலோகத்திலுள்ள மானிடர்களும் பரலோகங்களில் வசிக்கும் தேவகணங்களும் பகவதம்சர்களே. எல்லோரும் அந்த பகவானின்குழந்தைகளே. அக்காரணத்தைப்பற்றி எல்லோரும் சகோதரர்களே. தேவர்கள் மானிடர்களுக்கு ஜேஷ்ட சகோதரர்களென்னலாம். உலகத்தில் தென்படும் பிரகிருதி சக்திகளெல்லாம் அவர்களுடைய சக்திகள். அவர்களின் ஸமஷ்டி சக்தி, பகவானுடைய சக்தியே. பிரகிருதிசக்திகள் எனபவையெல்லாம் (அதாவது அக்னிசக்தி, சந்திர சூர்யசக்தி' வித்யுத் சக்தி, இடிமின்னல் முதலான அனேக விதங்களாயுள்ள வியக்தமான சக்திகளெல்லாம்) அத்தேவதைகளின் சக்திகளே. அவர்களுக்குள்பட்டு வேலைசெய்பவைகளே. இவ்விதமாய் மானிட கோடிகளுக்கும் தேவகோடிகளுக்குமுள்ள பரஸ்பரஸம்மந்தத்தையும் சகோதரபாவத்தையும் இக்காலத்திய இந்துக்களான நாம் மறந்திருக்கின்றோம். இது ரிஷிகளின் உபதேசங்களில் முதலானது.

(தொடரும்)

ராமச்சந்திர நாயுடு.

புத்தக விமர்சம்.

எல்லாம் நானே:— கா. சு. சேஷகிரிஜயர் இயற்றிய 40 பக்கங்களடங்கிய சிறுதுண்டுப்புத்தகம் விலை அணா 2. பிறபஞ்சமுழுமையும், அதனில் தோன்றும் சகலமும் பரப் பிரஹ்மத்தின் ஸ்வரூபம் என்பதையும் அப்பரப் பிரஹ்மமும் நானே யென்பதையும் அழகிய நடையில் நிரூபித்து அந்த தத்துவத்தை யாவரும் ஸதா அனுசந்தானம் செய்து வருதல் அவசியம் என்று இச்சிறு புத்தகத்தில் கூறியுள்ளார். இதைப்படித்து மிகவும் சந்தோஷ மடைந்தோம்.

அமிர்தார்ணவ லேகியம்.

இந்த லேகியம் ரத்தத்தை சுத்தி செய்து விர்த்தியாக்கி, நரம்பு ஸ்தானங்களை எல்லாம் பலப்படுத்தி, தேகச்சூடு, பித்தவாயு, கைகால் கண் எரிச்சல், இவைகளைச் சமனஞ்செய்து, மூளையைக் குளிர்ப்பண்ணி, தேக பலத்தையும் மேனியையும் உண்டாக்குகின்றது. மேலும் இம்மருந்து நாள்பட்ட க்ஷயம், கிரஹணி, நீடித்த தலைநோய், மார்புவலி முதலிய வியாதிகளையும் கண்டிக்கின்றது. எவ்வித பத்தியமும் கிடையாது.

20 தோலா கொண்ட டப்பி 1-க்கு ரூபா 2—0—0

எங்கள் கியாட்லாக் இனாமாய் அனுப்பப்படும்.

இனிமையானது! பரிமளமிகுந்தது!

மணி ஆயில்.

முப்பத்தைந்து வருஷகாலமாய் விற்பனையாகி வருகிறது.

இந்தக் கூந்தல் தைலம் சாஸ்திர முறைப்படி செய்யப்பட்டிருக்கிறது. அலங்காரத்துக்கு யோக்கியமான மனோகரமான சுகந்தமுள்ளது. சிரசில் உபயோகித்து வந்தால் ரோமங்களை உதிராமற் றடுத்து, நீண்டு அடர்த்தியாய் வளரும்படி செய்கிறது. தற்காலம் வெளிவந்துலாவும் தைலங்களைப்போல் கருதிவிடக்கூடாது. ஒரு தடவையாவது வாங்கி உபயோகித்து உண்மையையறியுங்கள். சிரசுக்குத் தடவுவதனால் மூளைக்குக் குளிர்ச்சியையுண்டுபண்ணக்கூடியது இது ஒன்றுதான். புட்டி 1-க்கு ரூ 1. ஐந்து புட்டி ஒரு தடவையில் வாங்கினால் விலை ரூ 4. வி. பி. செலவு பிரத்தியேகம். இன்னும் விபரம் வேண்டுவோர் எங்கள் கியாட்லாக்குக்கு எழுதுங்கள்.

வைத்திய சாஸ்திரி,

மணிசங்கர் கோவிந்தஜி,

ஆதங்க நிக்கிரக ஔஷதாலயம்,

45—மேலக்கோபுரவீதி,

மதுரை.

சர்வதேள் விஷ சஞ்சீவி

கதறி வந்தவன் களிப்புடன் செல்வான்!”

“விஷம் தீண்டினவன் நிமிஷத்தில் குணமடைவான்!”

குணமில்லாவிட்டால் ரூ. 100 இறும் கொடுக்கப்படும்.

நண்பர்களே! ஒவ்வொரு வீட்டிலும் தேளினுடைய உபத்ரவம் பொறுக்கமுடியாமல் அவஸ்தைப்படுவதை நாம் அனைவரும் கண்டு விசனமுற நேரிடுவதைப் பற்றி, நாம் அதிகக் கஷ்டப்பட்டு இதற்காக உயர்ந்த மருந்து கண்டு பிடித்திருக்கிறோம். இது அநேக ஐரோப்பிய டாக்டர்களாலும், தமிழ் வைத்திய பண்டிதர்களாலும், நன்கு மதிக்கப்பெற்றது. எமது மேற்கண்ட லங்கர் மார்க்குள்ள சர்வதேள் விஷ சஞ்சீவியைத் தேள்கொட்டின விடத்தில் உபயோகித்த உடனே ஒன்றிரண்டு நிமிஷத்திற்குள் குணமடையச் செய்யும். இவ் விஷ சஞ்சீவியை இன்னும் எலி, நாய், பூரான், செய்யான், பாம்பு, நண்டுத்தெறுக்கால் முதலிய எவ்வித விஷ ஜெந்துக்கள் தீண்டினாலும், டைரக்ஷனில் சொன்ன பிரகாரம் உபயோகித்தால் குணமடையலாம். மேற் சொன்னவைகளுக்கு உபயோகித்து குணமில்லாவிடில், பணம்வாபஸ் செய்து விடப்படும்.

இந்த சர்வதேள் விஷ சஞ்சீவியைக் கைப்பற்றுங்கள். இவ் விஷ சஞ்சீவி ஒவ்வொரு வீட்டிலும் அவசியம் இருக்க வேண்டியது. ஏனென்றால், மனிதனை இரவில் 12மணிக்கு நித்திரையில் விஷம் தீண்டி விட்டால், அம்மனிதன் எவ்வளவோ அவஸ்தை பட அநேகமருந்துகளையும் மந்திரங்களையும் உபயோகித்தும் பயன் படாமற் போகிறதல்லவா? அதற்காக இவ்விஷ சஞ்சீவி ஒவ்வொரு இல்லத்திலும் அவசியம் இருக்கவேண்டியது. அடியிற் கண்ட விலாசத்திக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

விலை பாக்கட் 1-க்கு 0—8—0

டசன் 1-க்கு 5—0—0

விலாசம்

வி. ஏ. எஸ் பாணி,

நெ. 3. இருளப்பன் தெரு, மதராஸ்.